பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 26 | வெள்ளிக்கிழமை | 07.02.2025 | அதிர்வு 189

## 14 ஏக்கர் காணியும் திஸ்ஸ விகாரைக்கே!

### யாழ். மாவட்ட செயலருக்கு பௌத்த மகா சம்மேளனம் கடிதம்

(ந.லோகதயாளன்)

யாழ். திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் 07▶

# தமிழர்களின் மீதான யுத்த மனநிலையில் இன்னும் இராணுவம்

### நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் விசனம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களுக்கு எதிராகப் போரை நடத்திய இராணுவம் அந்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06▶



# அமைதியற்ற முறையில் நடந்தால் சபையை விட்டு வெளியேற்றுவோம்

### அர்ச்சுனா எம்.பிக்கு பிரதி சபாநாயகர் கடும் எச்சரிக்கை



சபையில் அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவைப் படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி கடுமையாக எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமரிடத்தில் கேள்வி எழுப்பி உரையாற்றும்போது, சபாபீடத்தை அவமதிக்கும் வகையில் அவர் வசனமொன்றை வெளியிட்டதால் ஏற்பட்ட சர்ச்சையின்போது அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்டமையால் சபாநாயகர் இவ்வாறு 06▶




முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட படையினரை பெருமளவில் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

இந்த மனு எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு உரித்தான இல்லத்தை விட விசாலமான, பரந்த அரச மாளிகை ஒன்றை முறையற்ற விதத்தில் ஆக்கிரமித்திருக்கின்றார், 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட நிலக்கடலை மதிப்புக்கூட்டல் அலகு திறப்பு

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட நிலக்கடலை மதிப்புக்கூட்டல் அலகு முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் முத்துவிநாயகர் புரத்தில், முல்லை அக்கிரி பிஸ்னஸ் லிமிடெட் நிறுவனத்தில் நேற்று வியாழக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் நிலக்கடலை உற்பத்தியாளர் சங்கம் முல்லை அக்கிரி பிஸ்னஸ் லிமிடெட் ஆக மாற்றப்பட்டு விவசாயிகள் அந்த நிறுவனத்தின் பங்குதாரர்களாக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்ற நிலையில் சந்தை கேள்விகளை ஈடு செய்ய முடியாத நிலைமை இருந்து வந்தது. தற்போது உழவு, நாற்று நடுகை, அறுவடையிலிருந்து பொதி செய்தல் வரையில் இயந்திரமயமாக்கப்பட்டுள்ள நிலையில் சந்தைக் கேள்விகளை ஈடுசெய்யக் கூடியளவு உற்பத்திகளை மேற்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் மற்றும் இளம்பெண்களுக்கும் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முல்லை அக்கிரி பிஸ்னஸ் லிமிடெட்டின் நிறைவேற்று அதிகாரி தனது உரையில், விவசாயிகளுக்கு இரு வழி வருமானத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும்போது இலாபத்தைப் பெற்றுக்கொள்வார்கள் எனவும், நிறுவனத்தின் லாபம் விவசாயிகளுக்கும் பங்கிடப்படும்போது அதிலும் ஓர் இலாபத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

“முத்தையன்கட்டுக்குளம் இலங்கையில் வித்தியாசனமானதொன்றாக கடந்த காலங்களில் விளங்கியது. இது மாத்திரமே மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை இலக்கு வைத்து செயற்பட்டது. ஆனால், தற்போது நெல்லை முதன்மைப்படுத்தியதாக மாறிவிட்டது. தற்போது நிலக்கடலையை விவசாயிகள் பயிரிடத் தொடங்கியிருக்கின்றார்கள். நான் பல தடவைகள் இந்த மாற்றத்துக்காக விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். கடந்த காலங்களில் விவசாயக் கூலி காரணமாக பெருமளவு உற்பத்திச் செலவு ஏற்பட்டது. இப்போது அனைத்துமே இயந்திரமயமாகியிருப்பதால் அண்ணளவாக 60 சதவீதம் உற்பத்திக்கான செலவு குறைவடைகின்றது.” – என்று விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய நிறுவனங்களில் உற்பத்தியின் தரக்கு நிகராக இந்த நிறுவனம் தனது பொருட்களை உற்பத்தி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டிய முல்லைத்தீவு மாவட்ட செயலர், ஏனைய நிறுவனங்களில் விலைகளை விடவும் குறைவான விலையில் இவர்கள் சந்தைப்படுத்துவதால் நுகர்வோரை அதிகம் சம்பாதித்துக்கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையிலேயே முதல்தடவையாக, விவசாயிகள் தங்கள் உற்பத்திப்பொருட்களை தாங்களே பெறுமதிசேர் பொருட்களாக மாற்றி சந்தைப்படுத்தும் மாதிரியாக இது அமைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

“கடந்த காலங்களில் சங்கங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் என்ற பெயருடன் விவசாய அமைப்புக்கள் இயங்கினாலும் அவற்றால் தொடர்ந்து செயற்பட முடியவில்லை. தற்போது விவசாயக் கம்பனி என்ற நாமத்தின் கீழ் அவை இயங்கத் தொடங்குகின்றன. கம்பனி என்றாலே இலாப நோக்கத்துக்குரியது. இப்போதுதான் சரியான தடத்துக்கு விவசாய அமைப்புக்கள் வந்துள்ளன.” – என்று வடக்கு மாகாண பிரதம செயலர் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில்,

“வடக்கு மாகாணத்தில் அனைத்து வளங்களையும் கொண்ட செழிப்பான மாவட்டம் என்றால் அது முல்லைத்தீவுதான். ஆனால் அந்த வளங்களை நாங்கள் உரியமுறையில் பயன்படுத்தவில்லை. 1970 ஆம் ஆண்டுகளில் முத்தையன்கட்டுகுளத்தின் கீழ் வெங்காயம், செத்தல் மிளகாய் என்பன செய்கை செய்யப்பட்டன. ஆனால், கால ஓட்டத்தில் விவசாயிகள் அதனைக் கைவிட்டுவிட்டார்கள். விலையில் உறுதிப்பாடில்லாமையால்தான் அந்த நிலைமை நேர்ந்தது.

தற்போது இப்படியான விவசாய கம்பனிகள் ஊடாக உறுதியான விலையில் விவசாயிகளிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது சிறப்பான நடவடிக்கை.

விவசாய அல்லது கடல்சார் உற்பத்திப் பொருட்களை அப்படியே ஏற்றுமதி செய்யாமல் பெறுமதி சேர் பொருள்களாக மாற்றி ஏற்றுமதி செய்யும்போது பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதுடன் விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் உயர்வ

தொடர்ச்சி▼







# வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட நிலக்கடலை மதிப்புக்கூட்டல் அலகு திறப்பு

தொடர்ச்சி▲

தற்கான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த நிறுவனத்துக்கு வெளிநாடுகளுக்கு பெறுமதி சேர் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு விரைவில் கிடைக்கும் என நம்புகின்றேன். இலங்கையின் முதல் தர நிறுவனமாக இந்த நிறுவனம் வரவேண்டும்.

தற்போதைய அரசு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் நேரான சிந்தனையுடன் இருக்கின்றது. இந்தக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். விவசாயத்தை ஊக்குவிப்பது தொடர்பிலும் சிறப்புக் கவனம் செலுத்துகின்றது.

எனவே, விவசாயத்துறையை வளர்த்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக ஏற்றுநீர்பாசனத்தை நாங்கள் மீண்டும் நூறு சதவீதம் ஆரம்பிக்க வேண்டும். அப்போதுதான் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க முடியும்.” – என்று ஆளுநர் குறிப்பிட்டார்.













# ஜனாதிபதியை சந்தித்தனர் புதிய முப்படைத் தளபதிகள்

புதிதாக நியமிக்கப்பட்ட முப்படை தளபதிகள் நேற்று பிற்பகல் முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை, ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

பதவியேற்ற பின்னர், முப்படை தளபதிகள் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியை சந்தித்ததோடு ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கியுள்ளனர்.













# நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஐ.எம்.எவ். அதிகாரிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ள நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத் தூதுக் குழுவினருக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 3 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் மூன்றாவது மீளாய்வின் பின்னர் அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை அரசாங்கம் எட்டியுள்ளது.

இந்த மீளாய்வின் விடயங்கள் இந்த வருடம் பெப்ரவரி மாத இறுதியில் சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இது தொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் அத் திட்டத்தை தொடர்வது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீடு குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இலங்கைக்கான நீட்டிக்கட்ட கடனுதவியின் நான்காவது தவணையாக 333 மில்லியன் டொலர் தொகை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 9 ஆண்டுகள் காலப்பகுதியில் 3,000 காட்டு யானைகள் இறப்பு

2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 9 ஆண்டுகள் காலப்பகுதியில் நாட்டில் காட்டு யானைகளின் இறப்பு எண்ணிக்கை 3,400 ஐ கடந்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இதனை தெரிவித்த அவர், இன்றுவரை 3,477 காட்டு யானைகள் இறந்துள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

காட்டு யானைகளின் தாக்குதலால் கடந்த 9 ஆண்டுகளில் 1,190 பேர் பலியாகியுள்ளனர் என சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிலிருந்து அவர் வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க உட்பட ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசின் பல தலைவர்களும் பகிரங்கமாகக் கூறி வருகின்றனர்.

அது பற்றி எழுத்தில் அறியத் தந்தால் தாம் அந்த அரச இல்லத்தில் இருந்து வெளியேற நடவடிக்கை எடுப்பார் என்று மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே கூறியுள்ளார்.

ஆனால் அப்படி எழுத்தில் அவருக்கு அறிவிப்பு வழங்குவதில்லை என்று அரசு இப்போது தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே பாதுகாப்பை விலக்கிய விவகாரத்தில் உயர்நீதிமன்ற வழக்கை எதிர்நோக்கி உள்ள அரசு, அதில் சில சட்ட செயல் சிக்கல்களை எதிர்கொள்ளக் கூடும் என்று சட்ட வட்டாரங்கள் கருதுகின்றன. இந்தப் பின்புலத்தில் வீட்டை விட்டு வெளியேற்றும் கடிதத்தை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கி இன்னொரு வழக்கை வினையாக வாங்கிக் கொள்ள அரசாங்கம் தயார் இல்லை என்று கூறப்படுகின்றது.

அப்படி அந்த வீட்டிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்ற அரசு முயலுமானால் விடுதலைப் புலிகளை அழித்து, நாட்டுக்கு வெற்றியைத் தேடித் தந்த தலைவரை இந்த அரசு நடுவீதியில் விட்டுவிட்டது என்று காட்டி, அதன் மூலம் பச்சாதாப வாக்குகளை மொட்டுக் கட்சி சுழற்றிச் சுவீகரித்து விடும் என்று அரசுத் தலைவர்கள் அஞ்சுகிறார்கள் என்றும் ஒரு தகவல் உள்ளது.

\+ \+ \+

தென்னிலங்கையில் இடம் பெற்ற அறகலய போராட்டத்தின் போது சேதமடைந்த அல்லது எரிக்கப்பட்ட மொட்டுக் கட்சி எம்.பிக்கள் 43 பேருக்கு 122 கோடி ரூபா வரை நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருப்பது பற்றிய அதிர்ச்சிச் செய்தி நேற்று வெளியாகியிருக்கிறது.

இதில் அதிகூடிய தொகையாக ஒன்பது கோடி 59 லட்சம் ரூபாவைப் பெற்றவர் சுகாதார அமைச்சராக இருந்து தரம் இல்லாத மருந்துகளை இறக்குமதி செய்து மோசடியில் ஈடுபட்டவர் எனக் குற்றம் சுமத்தப்பட்ட கெஹலிய ரம்புக்வெலதான்.

அறகலய வன்முறையின் போது ஆளும் கட்சியை சேர்ந்த எழுபதுக்கும் மேற்பட்ட எம்.பிக்களின் சொத்துக்கள், வீடுகள் வன்முறை மூலம் சேதமாக்கப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன என்று முன்னர் கூறப்பட்ட போதிலும், இப்போது 43 பேருக்கு வழங்கப்பட்ட நஷ்ட ஈடு பற்றிய விவரங்கள்தான் வெளியாகி இருக்கின்றன.

இவை எல்லாவற்றிலும் விட பெறுமதி மிக்கதும், பெருமளவு புத்தகங்களைக் கொண்ட நூலகம் போன்று அமைந்திருந்ததுமான ரணில் விக்கிரமசிங்கவின் வீடு கொழும்பில் எரிக்கப்பட்டிருந்தமை பலரதும் கவலைக்கு இடமாகியிருந்தது.

அதற்கான நஷ்ட ஈடு ஏதும் வழங்கப்பட்டதா என்பது பற்றிய செய்தி ஏதும் இன்னும் வெளிவரவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்னர் வழங்கப்பட்டு வந்த தீர்வையற்ற வாகன உரிமங்களைப் பெறுவதில் ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ஈடுபாடு காட்டியவர் அல்லர். அதுபோல இப்போதும் தமது வீட்டுக்கு அவர் நஷ்ட ஈடு அவர் பெறவில்லையா அல்லது அது தனிக் கணக்கில் வழங்கப்பட்டதா என்பது தெரியவில்லை.

அது பற்றிய விவரம் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"பிரிவினைகளை ஏற்படுத்தும் இனவாத நடவடிக்கைகளிலேயே இராணுவம தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது என்று நான் தொடர்ந்து சொல்லி வருகின்றேன். தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் ஒரு போரை நடத்தியதோடு, அவர்கள் அந்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை. தமிழ் நலன்களுக்கு எதிரான மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நிறுவனமாகவே இராணுவம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்.

யாழ். தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரையைக் கட்டுவதில் இராணுவத்தினர் எவ்வாறு செயற்பட்டனர் என்பது இதற்குச் சிறந்த உதாரணமாகும். அப்போதைய இராணுவத் தளபதியால் தனியாருக்குச் சொந்தமான காணியில் அடிக்கல் நாட்டப்பட்டு விகாரை கட்டப்பட்டிருக்கின்றது.

அடிக்கல் நாட்டப்பட்ட சில நாட்களிலேயே யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டது. அதில் யாழ். மாவட்ட அரச அதிபர், தெல்லிப்பளை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு, தையிட்டி திஸ்ஸ விகாரையானது தனியார் காணியில் இருப்பதும், இந்தக்காணியானதுஎந்தவிகாரைக்கும்சொந்தமானது அல்ல என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தனர்.

குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மேற்கொண்டு எந்தவொரு கட்டுமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்றும், கட்டுமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையிலும், இராணுவமே சட்டவிரோத விகாரையைக் கட்டியது.

குறித்த விடயம் தொடர்பாக 2024 டிசம்பர் 13 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், 2025ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய போதும் மீண்டும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அப்போது தையிட்டிதிஸ்ஸவிகாரை கட்டப்பட்டுள்ள நிலம் தனியாருக்குச் சொந்தமான நிலம் என்றும், எந்தவொரு முறையான சட்ட நடைமுறையும் இன்றி, சட்டவிரோதமாகவே விகாரை கட்டப்பட்டது என்றும், இவ்விடயம் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

இந்த நாடாளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவரிடம் புதியதொரு விடயத்தைக் கொண்டு வருகின்றேன். அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எழுதிய கடிதம் தொடர்பாக "உதயன்" நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அவ்விடயம் தொடர்பான கடிதத்தை இன்று (நேற்று) சபையில் சமர்ப்பிக்கின்றேன். அந்தக் கடிதத்தில் சந்திரா நிமல் வாக்கிஸ்கா என்பவர் அகில இலங்கை பௌத்த காங்கிரஸின்தலைவர்என்றுஅவரதுகையொப்பம் இடப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானமுள்ள 6 ஏக்கர் காணியும், உண்மையில் தனியாருக்குச் சொந்தமானதான இருக்கும் நிலையில், சட்டவிரோத விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இருந்து திஸ்ஸ விகாரைக்குச் சொந்தமானது எனவும், திஸ்ஸ விகாரைக்கு 14 ஏக்கர் காணி இருந்தது எனவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, தனியாருக்குச் சொந்தமான காணிகளையும், அதனுடன் சேர்த்து மேலும் பல ஏக்கர் நிலத்தையும் பறிமுதல் செய்து வழங்க வேண்டும் என்றும், தனியாருக்குச் சொந்தமான காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் ஓர் இனவாதக் கட்டமைப்பில் செயற்படுகின்றது என்று நான் குறிப்பிடுவது இதனால்தான். அது அதன் மனநிலையையிலிருந்து மாற்றவில்லை. நான் கூறும் கூற்றுக்களில் ஓரளவு உண்மை இருப்பதாக நீங்கள் கருதினால் நீங்கள் சட்டபூர்வ செயல்முறையொன்றுக்கு செல்ல வேண்டும். இராணுவமென்றால் எந்தச் சட்டத்தையும் மீறலாம் என்ற நிலை இருக்க முடியாது. காட்டுச்சட்டங்களைப் பிரயோகிக்க முடியாது. ஆனால், இன்னும் அந்த அடிப்படையிலேயே அவர்கள் செயற்படுகின்றார்கள்.

இந்தக் கடித்தை எழுதியிருந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தற்போதைய தலைவர் யார் என்று நான் தேடியபோது, அவர் தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளராகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்பட்ட ஒருவராவார். எனவே, இங்கே ஒழுங்கமைக்கப்படும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளின் இணைப்பை நீங்கள் பார்க்கலாம்.

இந்த அரசு இனவாதக் கொள்கைகளைப் பின்பற்றப் போவதில்லை என்றும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் போகிறது என்றும் கூறிய உறுதிமொழிகளுக்கு உண்மையாக இருக்குமாயின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். எவரும் சட்டத்தை மீறுவதற்கு அனுமதிக்க முடியாது.

எனவே, தனியார் காணிகளில் கட்டப்பட்ட இந்த தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரத்தை எப்படிக் கையாள்கிறது என்பதைப் பொறுத்தே இந்த அரசு இனவாதமுடையாதா? இல்லையா? என்பது புலப்படும். திஸ்ஸ விகாரைக் குச் சொந்தமான நிலத்தில் விகாரை அமைக்கக் கூடியதாக இருந்தும், இந்தச் சட்டவிரோதச் செயலுக்காக தனியாருக் குச் சொந்தமான நிலத்தை அபகரிக்க அவர்கள் தேர்வு செய்திருப்பது விரும்பத் தகாத ஒன்றாகும் என்பதையும் தெரிவித் துக்கொள்கின்றேன்." – என்றார்.

---

## அமைதியற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதி சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்போது, நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பியினால் சபாநாயகரை பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக்காட்டியும் தெரிவித்தார்.

"எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். அதேபோன்று நேற்று (நேற்றுமுன்தினம்) எம்.பி. ஒருவர் இந்த ஆசனத்தைப் பார்த்து "ஷேம்" என்று கூறி அவமதித்துள்ளார். நான் அவ்வேளையில் இந்த ஆசனத்தில் இருந்திருந்தால் அதற்கு எதிராக

07

# ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார் மௌலானா!

## இப்படி பிள்ளையான் புலம்பல்



உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி வெளிநாட்டில் நிரந்தர வதிவிட உரிமை கோரும் ஆசாத் மௌலானா, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து பிள்ளையானின் முன்னாள் செயலாளர் ஆசாத் மௌலானா வெளியிட்டுள்ள தகவல்கள் குறித்து பதில் அளிக்கும்போதே பிள்ளையான் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர் அச்சுறுத்தல் எனத் தெரிவித்து வெளிநாட்டில் நிரந்தர வதிவிடத்தைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஆசாத் மௌலானா ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ஆறு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. ஏன் அவர் அந்தவேளை அது குறித்த விவரங்களை அம்பலப்படுத்தாமல் நான்கு வருடங்கள் காத்திருந்த பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் சனல் 4 இற்கும் சென்றார்?

தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற வேளை சி.ஐ.டியின் தலைவராகப் பணியாற்றினார்.

ஜனாதிபதியும் சி.ஐ.டியினரும் முட்டாள்கள். அவர்களுக்கு ஆயுதங்களைக் கைவிட்டவர்களுக்கும், ஐ.எஸ். மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியாதா?

நான் ஆயுதப் போராட்டத்தை விரும்பாததால் அரசியல் நீரோட்டத்தில் இணைந்து முதலமைச்சரானேன். 2015 முதல் 2020 வரை சிறையிலிருந்த ஒருவரால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்ற பேரழிவுத் தாக்குதலை எவ்வாறு திட்டமிட முடியும்.?

ஆசாத் மௌலானவை நாட்டுக்கு மீண்டும் அழைப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளமை சிறந்த விடயம். நான் சி.ஐ.டியினருக்கு ஒத்துழைப்பு வழங்கி போலியான கட்டுக்கதைகளை உருவாக்கியமைக்காக ஆசாத் மௌலானவைக் கைது செய்ய உதவுவேன்." – என்றார்.

---

## பச்சை மிளகாயின் விலை அதிகரிப்பு



சந்தையில் பச்சை மிளகாய் ஒருகிலோ கிராம் 1,200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கறிமிளகாய் ஒருகிலோ கிராம் 1,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மரக்கறிகளின் விலைகள் தற்போது சந்தையில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

கரட் ஒரு கிலோகிராம் 520 ரூபாய்க்கும், லீக்ஸ் ஒரு கிலோகிராம் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிமடை உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராம் 320 ரூபாய்க்கும், கோவா ஒரு கிலோகிராம் 400 ரூபாய்க்கும், தக்காளி ஒரு கிலோகிராம் 320 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நாள்களில் பெய்த மழையுடனான காலநிலையினால் இவ்வாறு மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## அமைதியற்ற...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கை எடுத்திருப்பேன்." – என்று பிரதி சபாநாயகர் குறிப்பிட்டார்.

இவ்வேளையில், அர்ச்சுனா எம்.பி. அது தொடர்பில் ஏதோ கருத்து தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்துகொண்டார்.

இதன்போது ஆசனத்தில் அமருமாறும், சபையின் ஒழுக்கத்தைப் பேணுமாறும் பிரதி சபாநாயகர் அவரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி. அமைதியற்ற முறையில் நடந்து கொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களைக் கொண்டு சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார். இதையடுத்து அர்ச்சுனா எம்.பி. அமைதியாக இருந்தார்.

---

## 14 ஏக்கர் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியும் விகாரைக்குச் சொந்தமானது எனவும், அதனை யாருக்கும் கையளிக்க முடியாது எனவும் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ். மாவட்ட செயலருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில்,

"கடந்த டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணியைப் பொது மக்களுக்குக் கையளிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அறிகின்றோம்.

குறித்த கூட்டத்துக்கு விகாரைக்குப் பொறுப்பான விகாராதிபதியையோ , விகாரை நிர்வாகத்தினரையோ அழைத்திருக்கவில்லை. எனவே, அந்த இணக்கப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 7 ஏக்கர் காணி, அதனைச் சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியையும் விகாரைக்குக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாறாக விகாரைக்குச் சொந்தமான காணிகளைப் பொதுமக்களுக்கு வழங்க முடியாது.

விகாரைக்குரிய காணியில் பௌத்த சமய முன்னேற்றத்துக்கான சைத்யம், புத்த மெதுரா, போதி, அன்னதான மடம், மடாலயம், ஓய்வு மண்டப வசதிகள், தியான மண்டபங்கள், பூங்கா போன்றவை அமைக்கப்பட வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும்." – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யுத்த மனநிலையில் இராணுவம்

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினையினால் எழுந்த யுத்தம் முடிவுக்கு வந்து ஏறத்தாழ 16 ஆண்டுகள் கடக்கப் போகின்றது.

ஒன்றரை தசாப்த காலம் முடிந்தும் தமிழர்கள் மீது தொடுத்த யுத்தத்தின் மனநிலையில் இருந்து இலங்கை இராணுவம் விடுபடவில்லை. இன்னமும் போர் மூர்க்கத்தோடுதான் அது செயல்படுகின்றது என்பதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று நாடாளுமன்றத்தில் விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார்.

தமிழ் நலன்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான ஒரு கட்டமைக்கப்பட்ட நிறுவனமாகவே இலங்கை இராணுவம் தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றது என்பதை அவர் நாடாளுமன்றத்தில் பொறுப்போடு கூறியிருக்கின்றார்.

தையிட்டியில் தனியார் காணியில் இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை கட்டப்பட்டிருப்பது தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் உண்மையை மீளவும் அம்பலப்படுத்திய போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விடயத்தை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

யுத்தம் முடிவடைந்த பின்னரே இந்தத் தையிட்டி விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்ட ஒரு சில நாள்களிலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டுள்ளது. அதில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், தெல்லிப்பளை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு தையிட்டி திஸ்ஸ விகாரை தனியார் காணியில் கட்டப்பட இருப்பதையும், இந்தக் காணி எந்த விகாரைக்கும் சொந்தமானது அல்ல என்பதையும் உறுதிப்படுத்தி இருந்தனர். மேற்படி காணியில் எந்த ஒரு கட்டுமானத்தையும் முன்னெடுக்கக் கூடாது என்றும், கட்டுமானச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் அதை மீறி இராணுவம் வல்வந்தமாக இந்த விகாரையைக் கட்டி இருக்கின்றது.

இது, தமிழர் தேசத்தில் - தமிழர் தாயகத்தில் - இராணுவ அதிகாரத்தின் மூலம் வல்வந்தமாகக் கட்டப்பட்ட ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும் என்பதை கஜேந்திரகுமார் நேற்று நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும், தமிழர் தேசத்தில் - தமிழ் மக்களுக்கு எதிரான - ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்றைத் தொடர்ந்து மேற்கொள்ளும் போக்கில் இலங்கையின் இராணுவம் செயற்பட்டு வருகின்றது என்பதற்கு இந்தத் தையிட்டி விகாரை அமைப்பு அப்பட்டமான உதாரணமாகும்.

இலங்கை இராணுவம் மட்டுமல்ல, இலங்கையின் பாதுகாப்பு துறை, ஏனைய படைகள் மற்றும் பொலிஸும் கூட இன்னமும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு யுத்தம் நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது போன்ற போக்கில்தான் செயற்பட்டு வருகின்றன.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மனவமைப்புக் கூட தமிழர்களுக்கு எதிரான யுத்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை என்பதுதான் உண்மை நிலைவரம்.

அதனால்தான் இலங்கையில் நல்லிணக்கமும், அமைதியும், சமாதானமும், புரிந்துணர்வும், இணக்கமான தீர்வு இன்னமும் வாய்ப்பின்றி - சாத்தியமின்றி - இழுபடுகின்றன.

வடக்குக் கிழக்கைத் தாயகமாகக் கொண்ட தமிழர் தேச மக்களுக்கு, நீதி - நியாயமான தீர்வு ஒன்றை வழங்கும் நேர்மையான மனஎண்ணம் இன்னமும் தென்னிலங்கையில் ஏற்படவில்லை. தென்னிலங்கை மக்களின் மனவமைப்பு இன்னமும் பௌத்த - சிங்களபேரினவாதமேலாதிக்கத்திமிர்போக்கில், தனது பரவணிப் பழக்க தோசத்தில் தொடர்ந்தும் ஆழப் புதைந்து கிடக்கின்றது.

அதிலிருந்து - பேரினவாதப் பிடியிலிருந்து - தென்னிலங்கை மீளாத வரை, இலங்கையில் இன சௌஜன்யமும், புரிந்துணர்வும், நல்லிணக்கமும், அமைதியும், சமாதானமும் சாத்தியமாகப் போவதில்லை என்பது தெளிவு.



# தீ வைத்து அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்ட ஈடாக
# மொத்தம் 122 கோடி ரூபா பெற்ற 43 எம்.பிக்கள் விவரம்

அறகலய போராட்ட காலத்தில் தீவைத்து அழிக்கப்பட்ட சொத்துக்களுக்கு நஷ்ட ஈடாக மொத்தம் 122 கோடி ரூபா பெற்ற 43 எம்.பி.க்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் அம்பலமாகியுள்ளது.

இழப்பீடு பெற்ற 43 முன்னாள் அரசாங்க உறுப்பினர்களின் பட்டியலை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் நேற்று வெளியிட்டார்.

இதன்படி, முன்னாள் அரசாங்க உறுப்பினர்கள் மொத்தமாக 122 கோடி 40 லட்சம் ரூபா இழப்பீடு கோரியுள்ளனர்.

இயற்கை பேரழிவின் போது முழுமையான சொத்து இழப்பீட்டிற்கே அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை. 25 லட்சம் ரூபாதான் எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், முன்னாள் அரசாங்க உறுப்பினர்கள் மிகவும் அதிகளவான இழப்பீட்டைப் பெற அதிகாரத்தைப் பயன்படுத்தினர் எனவும் குற்றம் சுமத்தினார்.

- கபில நுவன் அத்துகோரல – 5 லட்சத்து 4 ஆயிரம் ரூபா.
- விமலவீர திஸாநாயக்க – 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
- கீதா குமாரசிங்க – 9 லட்சத்து 72 ஆயிரம் ரூபா.
- ஜானக திஸ்ஸகுட்டியராச்சி – 11 லட்சத்து 43 ஆயிரம் ரூபா.
- குணபால ரத்னசேகர – 14 லட்சத்து 40 ஆயிரத்து 610 ரூபா.
- பிரேமநாத் சி.தொலவத்த – 23 லட்சம் ரூபா.
- பிரியங்கர ஜயரத்ன – 23 லட்சத்து 48 ஆயிரம் ரூபா.
- சம்பத் அத்துகோரல – 25 லட்சத்து 40 ஆயிரத்து 610 ரூபா.
- ஜயந்த கடகொட – 28 லட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபா.
- விமல் வீரவனஸ – 29 லட்சத்து 54 ஆயிரம் ரூபா.
- பேராசிரியர் சன்ன ஜெயசுமண – 33 லட்சத்து 34 ஆயிரம் ரூபா.
- அகில எல்லாவல – 35 லட்சத்து 54 ஆயிரத்து 250 ரூபா.
- சமல் ராஜபக்ஷ – 65 லட்சத்து 39 ஆயிரத்து 374 ரூபா.
- சந்திம வீரக்கொடி – 69 லட்சத்து 48 ஆயிரத்து 800 ரூபா.
- அசோக பிரியந்த – 72 லட்சத்து 95 ஆயிரத்து 780 ரூபா.
- சமன் பிரியா ஹேரத் – ஒரு கோடி 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா.
- ஜனக பண்டார தென்னகோன் – ஒரு கோடி 50 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
- ரோஹித அபேகுணவர்தன – ஒரு கோடி 16 லட்சத்து 40 ஆயிரம் ரூபா.
- சிறப்பு மருத்துவர் சீதா அரம்பேபொல – ஒரு கோடி 37 லட்சத்து 80 ஆயிரம் ரூபா.
- சஹான் பிரதீப் – ஒரு கோடி 71 லட்சத்து 30 ஆயிரம் ரூபா.
- ஷெஹான் சேமசிங்க – ஒரு கோடி 85 லட்சத்து 10 ஆயிரம் ரூபா.
- இந்திக்க அனுருத்த – ஒரு கோடி 95 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.
- மிலன் ஜயதிலக்க – 2 கோடி 23 லட்சம் ரூபா.
- கலாநிதி ரமேஷ் பத்திரன – 2 கோடி 81 லட்சம் ரூபா.
- துமிந்த திஸாநாயக்க – 2 கோடி 88 லட்சம் ரூபா.
- கனகா ஹேரத் – 2 கோடி 92 லட்சம் ரூபா.
- டி.பி.ஹேரத் – 3 கோடி 21 லட்சம் ரூபா.
- பிரசன்ன ரணவீர – 3 கோடி 27 லட்சம் ரூபா.
- டபிள்யூ.டி.வீரசிங்க – 3 கோடி 72 லட்சம் ரூபா.
- சாந்த பண்டார – 3 கோடி 91 லட்சம் ரூபா.
- எஸ்.எம்.சந்திரசேன – 4 கோடி 38 லட்சம் ரூபா.
- சனத் நிஷாந்த – 4 கோடி 27 லட்சம் ரூபா.
- சிறிபால கம்லத் – 5 கோடி 9 லட்சம் ரூபா.
- அருந்திக பெர்னாண்டோ – 5 கோடி 52 லட்சம் ரூபா.
- சுமித் உடுகும்புர – 5 கோடி 59 லட்சம் ரூபா.
- பிரசன்ன ரணதுங்க – 5 கோடி 61 லட்சம் ரூபா.
- கோகிலா குணவர்தன – 5 கோடி 87 லட்சம் ரூபா.
- மோகன் பி டி சில்வா – 6 கோடி 1 லட்சம் ரூபா.
- நிமல் லான்ஸா – 6 கோடி 92 லட்சம் ரூபா.
- அலி சப்ரி ரஹீம் – 7 கோடி 9 லட்சம் ரூபா.
- காமினி லொக்குகே – 7 கோடி 49 லட்சம் ரூபா.
- ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ – 9 கோடி 34 லட்சம் ரூபா.
- கெஹலிய ரம்புக்வெல்ல –9 கோடி 59 லட்சம் ரூபா.



# வளி மாசடைவதால் வருடாந்தம் 7 மில்லியன் மக்கள் உயிரிழப்பு




வளி மாசடைவதன் காரணமாக வருடாந்தம் 7 மில்லியன் மக்கள் உயிரிழக்கின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வளி மாசினால் ஏற்படும் சுவாச நோய்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன்போது விசேட வைத்திய நிபுணர் நிரஞ்சன திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு சராசரி மனிதன் நாளாந்தம் 8000 இலிருந்து - 10,000 லீற்றu; gpuhz thAit Rth rpg;gjhf itj;jpau;fs; njuptpf; fpd;wdu;.



# கிரிஷ் கட்டடத்தில் நேற்று தீப்பரவல்

கொழும்பு - கோட்டையில் உள்ள 60 மாடி கிரிஷ் கட்டடத்தில் நேற்று தீப் பரவல் ஏற்பட்டது.

கட்டடத்தின் மேல் தளத்தில் இத்தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

3 தீயணைப்பு வாகங்கள் மூலம் தீயை அணைக்கும் முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன என தெரிவிக்கப்படுகிறது.

# சட்ட மா அதிபருக்கு எதிராக குற்றப்பிரேரணை சமர்ப்பிக்குமாறு அஹிம்சா விக்ரமதுங்க கோரிக்கை

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை வழக்கு தொடர்பில் கடமை தவறிய சட்ட மாஅதிபருக்கு எதிராக குற்றப்பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அஹிம்சா விக்ரமதுங்க கலாநிதி ஹரினி அமரசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பிலான விசாரணைகளின் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்ட மூவரை விடுவிப்பதற்கு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சட்ட மாஅதிபர் பாரிந்த ரணசிங்க எடுத்த நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.



இந்த தீர்மானம் தற்செயலானது அல்லவென்பது கடந்த வாரத்தில் இடம்பெற்ற விடயங்களில் தெளிவாவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2015ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கு விசாரணைகள் தீவிரமாக அல்லது நம்பகத்தன்மையுடன் இடம்பெறவில்லை எனவும் அஹிங்சா விக்ரமதுங்க தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சட்ட மா அதிபருக்கு எதிராக குற்ற பிரேரணையை முன்வைத்து அவ பதவிநீக்கம் செய்வதே நீதிக்கா அரசாங்கத்தின் வாக்குறுதியை நிறை வேற்றுவதற்கான ஒரேவழி எனவு அஹிம்சா விக்ரமதுங்க குறிப்பி டுள்ளார்.

# சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி அழைப்பு

சட்டமா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளை ஜனாதிபதி நேற்று கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளதாக வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்கின் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய சட்டமா அதிபரின் வழங்கிய பரிந்துரை குறித்து ஆலோசிப்பதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீதியை நிலைநாட்ட ஒருபோதும் பின்னிற்காது.

அதேநேரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தவகையில் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்கின் சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய சட்டமா அதிபரின் வழங்கிய பரிந்துரை குறித்து ஆலோசிக்கப்படவுள்ளது.” என்றார்.



# ஜப்பானின் அரச சார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் வடக்கில் 95 பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்பு

**(கி.வசந்தன்)**

ஜப்பானின் அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியில் வடக்கில் 95 பாடசாலை கட்டடங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவைத் தளமாக கொண்டு இயங்கும் சேவா லங்கா நிறுவனம், ஜப்பானின் நிப்பொன் பவுண்டேசன் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் 95 பாடசாலை கட்டடங்களை புனரமைத்தல் மற்றும் புதிதாக நிர்மாணிததல் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலத்தின் மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடம் ஒன்றொ புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இருந்து வருகை தந்த நிப்பொன் பவுண்டேசன் உயர் அதிகாரிகள், சேவாலங்கா நிறுவனத்தினர் ஆகியோர் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்து குறித்த சேதமடைந்த கட்டடத்தைப் பார்வையிட்டமையுடன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருடனும் இதன்போது கலந்துரையாடினர்.











# யாழ். சிறைச்சாலையில் இரத்ததான முகாம்

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் இரத்ததான நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் சீ.இந்திரகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினரால் குருதி சேகரிப்பு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப் படையினர், குருதிக்கொடையாளர்கள், நலன்விரும்பிகள் என 60பேர் வரையில் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர், பிரதான ஜெயிலர், ஜெயிலர்கள், புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி தாரணி ,பொது சுகாதார பரிசோதகர் ரவீனதாஸ், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், செஞ்சிலுவை சங்கம் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணம் கிளை அனுசரனையோடு குருதிக் கொடையாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.












# மாதம்பையில் பஸ் - ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து





(க.மகாதேவன்)

சிலாபம் - கொழும்பு வீதியில் மாதம்பை பம்பல பகுதில் நேற்று முன் தினம் புதன்கிழமை பஸ்ஸ/ம் ஓட்டோவும் மோதி பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

மாதம்பை பம்பல பகுதியில் லொறியை முந்திச் செல்ல முயன்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் எதிரே வந்த ஓட்டோவுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓட்டோச் சாரதியும் ஒரு பயணியும் படுகாயமடைந்து சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்படுள்ளனர்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து அரச பஸ்ஸின் ஓட்டுநரும், நடத்துனரும் தப்பி ஓடினர் எனக் கூறப்படுகின்றது. கோபமடைந்த அப்பகுதி மக்கள் ஓட்டுநரைத் துரத்திச் சென்று தாக்கினர் என்றும் கூறப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலர் பதவியில் இருந்து விலகினார் ஹசன் அலி

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து எம்.டி. ஹசன் அலி விலகியுள்ளார்.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவுக்கும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தலைவர் பஷீர் சேகு தாவூத்துக்கும் அவர் புதன்கிழமை கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும், கட்சியில் எனது உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமா செய்வது உடனடியாக அமுலுக்கு வருவதை முறையாக அறிவிக்கின்றேன்.



இல.30, கடற்கரை வீதி, கல்கிஸ்ஸையில் உள்ள எனது இல்லத்தில் இயங்கிவரும் கட்சி அலுவலகமும் இனி இயங்காது.

கட்சியில் எனது பதவிக் காலம் முழுவதும் எனக்கு அளித்த அனைத்து ஒத்துழைப்புக்கும் கட்சி ஆதரவாளர்கள், தலைமைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற நலன் விரும்பிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளராக நான் மூன்று தசாப்தங்களாக பதவி வகித்துள்ள நிலையில், உங்களுக்கும் தேர்தல் செயலக ஊழியர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

நியாயமான மற்றும் நேர்மையான அனைத்து எதிர்கால முயற்சிகளிலும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற வாழ்த்துகிறேன். - என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது வயது மூப்பு, உடல்நிலை என்பவற்றைக் காரணமாக கொண்டே இந்த ராஜினாமா இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மின்சாரக் கம்பிகளை வெட்டித் திருட முயன்ற இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் படுகாயம்

## மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியில் சம்பவம்









(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியிலுள்ள கொத்துக்குளம் மாரியம்மன் கோவிலின் முன்னால் அமைந்துள்ள அதிஉயர் மின்சாரத்தை கட்டுப்படுத்தும் கட்டடப்பகுதியில் உள்நுழைந்து மின்சாரக் கம்பிகளை திருட முற்பட்ட ஒருவர் மின்சாரம் தாக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் மின்சாரசபையினால் அதிஉயர்வான 3300 சக்தி மின்சாரத்தை சீராக்கி கட்டுப்படுத்தி பாவனையாளர்களுக்கு அனுப்பும் ட்ரான்ஸ்போமர் கட்டட பகுதிக்கு நேற்றுக் காலையில் மின்சாரசபை உத்தியோகத்தர்கள் சென்றபோது அங்கு மின்சாரம் தாக்கி கீழே வீழ்ந்து படுகாயங்களுடன் இளைஞன் ஒருவர் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து பொலிசார் சம்பவ இடத்திற்குச் சென்று படுகாயங்களுடன் கிடந்த இளைஞனை மீட்டு மட்டு போதனாவைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்த்தனர். வெட்டப்பட்ட மின்சார கம்பிகள், வெட்டுவதற்கான ஆயுதங்கள் மற்றும் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மட்டு தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# இந்தியர்களை கைவிலங்குடன் நாடு கடத்தியது அமெரிக்கா

## மாநிலங்களவையில் ஜெய்சங்கர் விளக்கம்



நாடு கடத்தப்படும் இந்தியர்கள், எந்த வகையிலும் தவறாக நடத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய அமெரிக்க அரசுடன் இணைந்து செயல்படுகிறோம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியிருந்தனர் என கூறி 104 இந்தியர்களை அந்நாட்டு அரசு தனது இராணுவ விமானம் மூலம் இந்தியாவுக்கு நேற்று முன்தினம் திருப்பி அனுப்பியது. கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் அவர்கள் அழைத்து வரப்பட்டனர் என புகார் எழுந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்க அனுமதி கோரியும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நேற்று அமளியில் ஈடுபட்டனர். இதனால், இரு அவைகளிலும் அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சிகளின் தொடர் அழுத்தத்தை அடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக மாநிலங்களவையில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம் அளித்தார். இதன்போது அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சட்டவிரோதமாக தங்கி இருக்கும் வெளிநாட்டவர்களை அமெரிக்கா நாடு கடத்துவது புதிதல்ல. 2009 ஆம் ஆண்டு முதல் பலர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். நாடு கடத்தும் செயல்முறையும் புதிதல்ல. அது பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இது ஒரு நாட்டுக்கு மட்டும் பொருந்தக்கூடிய கொள்கையும் அல்ல. பெப்ரவரி 5, 2025 அன்று இந்தியா வந்து சேர்ந்த இந்தியர்கள் விஷயத்திலும் கடந்த கால நடைமுறைகளே பின்பற்றப்பட்டன. அதில் எந்த மாற்றமும் இல்லை.

அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்தால் (Immigration and Customs Enforcement) ஒழுங்கமைக்கப்பட்டு, நாடு கடத்தல்கள் செயல்படுத்தப்படுகின்றன. விமானம் மூலம் நாடுகடத்தப்படுவதற்கான விதிமுறைகள் 2012 முதல் அமலில் உள்ள எஸ்.ஓ.பி (standard operating procedure)-யை அடிப்படையாகக் கொண்டவை. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எவ்வித கட்டுப்பாடும் விதிக்கப்படவில்லை. உணவு மற்றும் பிற தேவைகள், சாத்தியமான மருத்துவ அவசரநிலைகள் உட்பட விமான பயணத்தின்போது நாடு கடத்தப்படுபவர்களின் தேவைகள் கவனிக்கப்படுகின்றன. கழிப்பறை இடைவேளையின்போது, தேவைப்பட்டால் தற்காலிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இது சிவிலியன் விமானங்களுக்கும் இராணுவ விமானங்களுக்கும் பொருந்தும்.

விமானப் பயணத்தின்போது நாடு திரும்பும் நாடுகடத்தப்பட்டவர்கள் எந்த வகையிலும் தவறாக நடத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய நாங்கள் அமெரிக்க அரசுடன் இணைந்து செயல்படுகிறோம். அனைத்து நாடுகளும் தங்கள் நாட்டினர், வெளிநாடுகளில் சட்டவிரோதமாக வசிப்பது கண்டறியப்பட்டால் அவர்களைத் திரும்ப அழைத்துச் செல்வது கடமையாகும். சட்டப்பூர்வ நடமாட்டத்தை ஊக்குவிப்பதும், சட்டவிரோத நடமாட்டத்தைத் தடுப்பதும் நமது கூட்டு நலனில் அடங்கும். சட்டவிரோத குடியேறிகள் மீது வலுவான நடவடிக்கை எடுப்பதில் நமது கவனம் இருக்க வேண்டும்.” – என்றார்.

# இந்திய விமானப் படைக்குச் சொந்தமான போர் விமானம் விபத்துக்குள்ளானது




இந்திய விமானப் படைக்கு சொந்தமான மிராஜ் 2000 என்ற போர் விமானம் நேற்று மத்தியப் பிரதேச மாநிலம் ஷிவ்புரி அருகே வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது விபத்துக்குள்ளானது.

விமானத்தில் பயணித்த இரு விமானிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சம்பவத்தில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

முதற்கட்ட தகவல்களின்படி, விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்திற்கான சரியான காரணத்தை கண்டறிய நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிராஜ் 2000, ஒரு மல்டிரோல் போர் விமானம், இந்திய விமானப் படையின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது, 2019 இல் பாலகோட் வான்வழித் தாக்குதல்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது.



# இஸ்ரேலிய பணயக்கைதிகளை துஷ்பிரயோகம் செய்த ஹமாஸ்

இஸ்ரேலிய ஆண் பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நாட்டிற்குள் கடந்த 2023 ஆம் ஆண்டு நுழைந்து ஹமாஸ் அமைப்பினர் கொடூர தாக்குதல் நடத்தினர். இதில் 1200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 250 இற்கும் மேற்பட்டோர் பணயக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதனால் கோபம் அடைந்த இஸ்ரேல் ஹமாஸ்க்கு எதிராக போர் பிரகடனம் செய்து காசா மீது தாக்குதல் நடத்தியது. இதனால் காசாவில் உள்ள பாலஸ்தீன மக்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டனர். மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டனர்.

பின்னர் அமெரிக்கா, கட்டார், எகிப்து நாடுகள் இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட பேச்சுவார்த்தை நடத்தினர். இதன்காரணமாக 2023 நவம்பர் மாதம் இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது.

அப்போது, 100 இற்கும் மேற்பட்ட பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதற்குப்பதிலாக இஸ்ரேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாலஸ்தீன இளைஞர்கள், பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்நிலையில், இஸ்ரேலிய ஆண் பணயக்கைதிகளை பாலியல் பலாத்காரம் செய்தனர் என கூறி, தன்பாலின ஈர்ப்பாளர்களாக இருந்த தனது சொந்த அமைப்பினரை ஹமாஸ் சித்திரவதை செய்து தூக்கிலிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

காசாவில் ஓரினச்சேர்கை என்பது சட்டவிரோதமானது. இதற்கு பல ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்.

ஹமாஸ் முன்னாள் தளபதி மஹ்மூத் இஷ்டிவி, ஓரினச்சேர்க்கை உறவு வைத்திருந்தார் என கூறி 2016 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார்.

ஹமாஸ் அவரை ஒரு வருடத்திற்கு சிறையில் அடைத்து சித்திரவதை செய்து. அவரது மார்பில் மூன்று முறை சுட்டு கொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸ் துணை ஜனாதிபதி சாரா டுடெர்டின் பதவி நீக்கம்

பிலிப்பைன்ஸின் துணை ஜனாதிபதி சாரா டுடெர்டின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டத்தை அடுத்து அவரை பதவி நீக்கம் செய்ய அந்நாட்டு நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது .

பொது நிதியிலிருந்து மில்லியன் கணக்கான டொலர்களை பயன்படுத்தினார் எனவும் ஜனாதிபதி ஃபெர்டினாண்ட் “பாங்பாங“ மார்கோஸை படுகொலை செய்வதாக மிரட்டினார் என்றும் டுடெர்ட்டே மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதிநிதிகள் சபையின் 306 உறுப்பினர்களில் மொத்தம் 215 பேர் துணை ஜனாதிபதி சாரா டுடெர்டை பதவி நீக்கம்



செய்ய வாக்களித்துள்ளனர்.

இது மசோதா நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான மூன்றில் ஒரு பங்கு வரம்பை விட அதிகமாகும். இந்த மசோதா தற்போது 24 உறுப்பினர்களைக் கொண்ட செனட்டால் விசாரிக்கப்படும்.

துணை ஜனாதிபதி சாரா டுடெர்டே குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், டுடெர்ட்டே தனது பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

மேலும் பிலிப்பைன்ஸ் வரலாற்றில் பதவி நீக்கம் செய்யப்படும் முதல் துணை ஜனாதிபதி இவர் ஆவார் .

செனட் தனது தீர்ப்பை வழங்கும் வரை அவர் பதவியில் நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# பங்களாதேஷில் மீண்டும் போராட்டம் வெடித்தது

பங்களாதேஷின் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஷேக் ஹசீனாவின் பூர்வீக இல்லமும் அவரது கட்சியின் ஏனைய உறுப்பினர்களின் இல்லங்களும் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் தரப்பினரால் தீ வைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.




பதவி நீக்கப்பட்ட ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள நிலையில் அங்கிருந்து சமூக ஊடகங்கள் மூலம் உரையாற்றுவார் என்ற செய்தி வெளியானது .

இதனைத் தொடர்ந்து அவரது வீடு சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20 ஆண்டுகாலமாக பங்களாதேஷில் ஆட்சி புரிந்த ஷேக் ஹசீனா அங்கு ஏற்பட்ட அரசியல் குழப்பநிலை காரணமாக தமது பதவியைத் துறந்தார் . பின்னர் இந்தியாவில் தஞ்சமடைந்தார்.

அருங்காட்சியகமாக மாற்றப்பட்டிருந்த ஷேக் ஹசீனாவின் தந்தையின் இல்லமும் நேற்று முன்தினம் உடைக்கப்பட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# இன்றைய ராசி பலன்கள் - 07.02.2025




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்த நேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திட காத்திரம் பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள்.பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண் காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப் படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.02.2025




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்கு களை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன் களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத் தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவை களை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற் றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்று வீர்கள். உங்கள் முயற்சி-க்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக் கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடு வீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிச மான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக் கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப் பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப் புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறு பாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




உங்கள் விருப்பங்களை எளிதில் அடைவதற்கு இது சாதகமான நாள். கடின மான சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணியில் நற்பெயர் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் திறமை களை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை நிலை உயரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் மகிழ்ச்சி யும் பராமரிக்க இயலும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினை யும் இருக்காது.



# வவுனியா ஏ9 வீதியில் நேற்றிரவு தீப்பற்றி எரிந்த மோ. சைக்கிள்

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் நேற்றிரவு ஏ9 வீதியில் பயணித்த மோட்டர் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்தது.

வவுனியா நகரில் இருந்து சென்ற மோட்டர் சைக்கிள் ஒன்று வவுனியா மகாவித்தியாலயத்தை அண்மித்து நிறுத்திவிட்டு, மீண்டும் புறப்படத் தயா ரான போது திடீரென தீப்பற்றி எரிந் துள்ளது.

தீயை கட்டுப்படுத்த மோட்டர் சைக் கிள் சாரதி மற்றும் வீதியால் சென்றோர் முயன்ற போதும் மோட்டர் சைக்கிள் பகுதி யளவில் எரிந்து நாசமாகிய பின்னரே தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.